2

3

நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம்
08 AUG 2011
சென்னை-600 005

சுருக்கம்

பணியமைப்பு – ஈரோடு மாநகராட்சி – புதியதாகத் தோற்றுவிக்கப்பட்ட மாநகர நல அலுவலர் (City Health Officer) பணியிடத்தினை பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறையிலிருந்து துணை இயக்குநர் நிலையில் உள்ள அலுவலரைக் கொண்டு நிரப்புதல்–ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.6) துறை

அரசாணை (2 ப) எண்: 83

நாள் : 05–08–2011.
திருவள்ளுவராண்டு –2042
ஆடித்திங்கள் 20–ம் நாள்
படிக்கப்பட்டது:

1) அரசாணை (நிலை) எண்.206, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.22.10.2008
2) ஆணையாளர், ஈரோடு மாநகராட்சி கடித ந.க.எண்.சி1/18577/08, நாள்.02.12.2008
3) நகராட்சி நிர்வாக இயக்குநர் கடித ந.க.எண்.38057/2009/மாந.அ2, நாள்.29.08.2009
4) இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை கடித ஆர்.எண்.124858/ E1/2009/S5, நாள்.16.02.2010
5) ஆணையாளர், ஈரோடு மாநகராட்சி கடித ந.க.எண்.சி1/18577/08, நாள்.06.04.2008
6) நகராட்சி நிர்வாக இயக்குநரின் ந.க.எண். 38057/ 2009/மா.ந.அ2, நாள்.10.02.2011

*********

ஆணை:

பார்வை 1–ல் படிக்கப்பட்ட அரசாணையில், 1996–ம் வருடத்திய தமிழ்நாடு மாநகராட்சி பொது சுகாதாரப் பணி விதிகளில் வகுப்பு–1 (Class-1) பிரிவு–1 (Category-1)–ல், ஒரு "மாநகர நல அலுவலர்" பணியிடம் (ரூ.9100–275–14050 என்ற ஊதிய விகிதத்தில் புதியதாக தோற்றுவிக்கப்பட்டு, மாநகராட்சி பணி விதிகள் 1996–ன் படி நிரப்பவும், "மாநகர நல அலுவலர்" பணியிடம் நிரப்பப்பட்டவுடன் தற்போதுள்ள "நகர் நல அலுவலர்" (City Health Officer) பணியிடத்தை தாய் துறைக்கு ஒப்படைக்கவும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. 1996–ம் வருடத்திய தமிழ்நாடு மாநகராட்சி பொது சுகாதாரப் பணி விதிகளில் வகுப்பு–1 அலுவலர்கள் அரசால் நியமிக்கப்பட வேண்டும். மேற்படி மாநகராட்சி பணிவிதிகளின்படி "மாநகர நல அலுவலர்" பணியிடத்தை பதவி உயர்வின் மூலம் பூர்த்தி செய்ய மருத்துவ அலுவலர் மற்றும் நல அலுவலராக குறைந்தது 3 ஆண்டுகள் பணிபுரிந்திருக்க வேண்டும் மற்றும் பொது சுகாதார பட்டயப்படிப்பு முடித்திருக்க வேண்டும் என தகுதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளது.

2. ஈரோடு மாநகராட்சி மாமன்றம் தனது 28.11.2008 நாளிட்ட தீர்மான எண்.939–ல், ஈரோடு மாநகராட்சியில் தற்போது பணிபுரிந்து வரும் நகர்நல அலுவலர் மற்றும் மருத்துவ அலுவலர்களில், மேற்காணும் தகுதிகளைப் பெற்றவர் ஒருவரும் இல்லாத காரணத்தால், அரசு ஆணையில் தெரிவிக்கப்பட்டவாறும், அளவுகோலின்படியும் மாநகர பொதுசுகாதாரப் பணிகள், நோய்தடுப்பு திட்டப்பணிகள் மற்றும் உணவு கலப்பட தடைச்சட்ட பணிகள் ஆகியவற்றை மேற்கொள்ளும் பொருட்டு, இப்பணியிடம் அத்தியாவசியமாக தேவைப்படுவதாலும், பொதுச்சுகாதார பட்டயப்படிப்பு முடித்தவராகவும், மருத்துவ அலுவலராகவும், நல அலுவலராக குறைந்தது 3 ஆண்டுகள் பணிபுரிந்தவராகவும் உள்ள தகுதி வாய்ந்த அலுவலரைக் கொண்டு, மாநகர நல அலுவலர் பணியிடத்தை பூர்த்தி செய்ய அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப ஒப்புதல் வழங்கியுள்ளது. மேற்படி தீர்மானத்தின் அடிப்படையில், ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அனுப்பிய பார்வை 2–ல் படிக்கப்பட்ட கருத்துருவை நகராட்சி நிர்வாக ஆணையாளர் பார்வை 6–ல் படிக்கப்பட்ட கடிதத்தின் மூலம் அரசிற்கு மேலனுப்பி, ஈரோடு மாநகராட்சியில் மாநகர நல அலுவலர் (City Health Officer) பணியிடத்தில் தகுதிவாய்ந்த நபர் ஒருவரை பொது சுகாதார துறை மூலம் அயற்பணி (Deputation) அடிப்படையில் நியமிக்குமாறு அரசுக்கு கோரியிருந்தார்.

ITS

3) இதனடிப்படையில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல்வாழ்வுத்துறையின் இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத் துறை அவர்களிடம் அறிக்கை கோரப்பட்டது. பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத் துறை இயக்குநர் பார்வை –4ல் படிக்கப்பட்ட தனது கடிதத்தில், தமிழ்நாடு பொது சுகாதார பிரிவில் பணியுரியும் பெரும்பாலான சுகாதார அலுவலர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளதால் 1 அல்லது 2 ஆண்டுகள் மட்டுமே அனுபவம் பெற்றவர்களாக உள்ளனர் எனவும், எனவே ஈரோடு மாநகராட்சி மாநகர நல அலுவலர் பணியிடத்தை துணை இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு என்ற நிலைக்கு (ரூ.15600–39100+ 7600 தர ஊதியம்) தகுதி உயர்த்தி தீர்மானம் நிறைவேற்றுமாறு ஈரோடு மாநகராட்சி ஆலோசனை வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

4) பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத் துறை இயக்குநர் தெரிவித்த கருத்து குறித்த நகராட்சி நிர்வாக ஆணையரிடம் குறிப்புரை கோரப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையர் பார்வை 6ல் படிக்கப்பட்ட தனது கடிதத்தில், பார்வை 1–ல் படிக்கப்பட்ட அரசாணையில், ஈரோடு மாநகராட்சிக்கு தோற்றுவிக்கப்பட்ட "மாநகர நல அலுவலர்" பணியிடத்திற்கு ஊதிய விகிதம் ரூ.9100–275–14050 (புதிய ஊதிய விகிதம் ரூ.15600–39100+ 5700) எனவும், தற்போது, ஈரோடு மாநகராட்சி மாமன்றம் தனது 29.03.2010 நாளிட்ட தீர்மானத்தில் (எண்.109) புதிய ஊதிய விகிதத்தின்படி ரூ.15600–39100+ 7600 கொண்ட "துணை இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்புத்துறை" என்ற அந்தஸ்திற்கு நகர் நல அலுவலர் பணியிடத்தை நிலை உயர்த்த அனுமதி வழங்கியுள்ளதாக பார்வை 5ல் படிக்கப்பட்ட கடிதத்தில் ஈரோடு மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளதாகவும், தற்போதுள்ள மாநகர நல அலுவலர் பணியிடத்தை பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்புத் துறை துணை இயக்குநர் தகுதிக்கு தரம் உயர்த்தி நிரப்ப உரிய ஆணை வழங்குமாறு கோரியுள்ளார்.

5) மேற்கண்ட சூழ்நிலையில், நகராட்சி நிர்வாக ஆணையரின் கோரிக்கையை ஏற்று, ஈரோடு மாநகராட்சியில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட மாநகர நல அலுவலர் (City Health Officer) பணியிடத்தினை, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறையிலிருந்து துணை இயக்குநர் நிலையில் உள்ள அலுவலரைக் கொண்டு நிரப்ப அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ச.கருத்தையா பாண்டியன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை–600 005.
ஆணையர், ஈரோடு மாநகராட்சி, ஈரோடு.
இயக்குநர், பொது சுகாதாரம் (மற்றும்) நோய் தடுப்புத்துறை,
359, அண்ணாசாலை, சென்னை–600 006.
நகல்
மாண்புமிகு அமைச்சர் (நகராட்சி நிர்வாகம் (ம) ஊரக வளர்ச்சி) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
செயலரின் தனிச்செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை– 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை, சென்னை– 600 009.
இ.கோ/உ.நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

8/8/11
பிரிவு அலுவலர்.
8/8/11